ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2300/13 - 2022 ඔක්තෝබර් මස 05 වැනි බදාදා - 2022.10.05
2300/13 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்*

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2019, திசெம்பர் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2 ஆம் பந்தியை, 2022, ஓகத்து 22 ஆந் திகதிய 2294/26 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் அறிமுகப்படுத்தப்பட்ட (ண) உப பந்திக்குக் கீழ் உடனடுத்து வருமாறு பின்வரும் உப பந்தியைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

(த) கைத்தொழில்துறை எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ், உள்நாட்டு சுகாதாரத் துணிவகை (sanitary napkins) உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளப்படும், இ. மு. குறியீடுகள் 3920.10.20 (பொலிஎதலீன் பல்பகுதியங்கள் - சாணைத்துணிகள், சுகாதாரத் துவாய்கள் போன்றவற்றின் தயாரிப்பில் உபயோகிக்கப்படும் உலோகமிடப்படாத, அகலமானது 110 மி. மீற்றருக்கு மேற்பட்ட, ஆனால் 230 மி. மீற்றருக்கு மேற்படாத) 3920.10.90 (பிற - பொலிஎதலீன் பல்பகுதியங்கள் (டப்ளிவு) 3926.90.99 (பொலிஎதலீன் பல்பகுதியங்கள்) 4811.59.10 (கடதாசி, கடதாசி அட்டை, செலுலோசு நிரப்புப் பொருட்கள், செலுலோசு நார்களினால் தயாரிக்கப்பட்ட பின்னல்கள், சிலிக்கன் பூசப்பட்ட) மற்றும் 5603.11.00 (நெய்யப்படாத புடவை வகைகள் (சதுர மீற்றருக்கு 25 கிராமிற்கு மேற்படாத நிறையைக் கொண்டவை) ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள் அல்லது இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி.

இக்கட்டளை 2022, ஒற்றோபர் 06 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, ஒற்றோபர் 05.

EOG 10 - 0102

1A - G 6006 — 456 (2022/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.